**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.206/2022**

**வா.சா.– 1– தவமணி , க/பெ. நாராயணசாமி**

**நாள். 29.06.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 5 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 56 செண்ட் என்பது தெரியும், அதில் 3 ல் ஒரு பங்கு கேட்கிறேன் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதில் அதில் 25 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்பது தெரியாது. மேற்படி 5 ம் பிரதிவாதி கட்டிட அனுமதி பெற்று வசித்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் என் அம்மா இறந்து 4 வருடங்கள் ஆகிறது, அப்போது தான் எனக்கு தெரியும். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் இல்லை. 5 ம் பிரதிவாதி தனபாலுக்கு உரிய சொத்தில்தான் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் நான் அனைத்து விவரங்களும் தெரிந்து 13 வருடங்கள் கழித்து தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் இங்கு இல்லை என்பதாலும் மகாராஷ்ட்ராவில் இருந்ததால் தெரியவில்லை. எனக்கு பாகப்பிரிவினை கிடைக்கும் பட்சத்திலும் 5 ம் பிரதிவாதி வாங்கிய சொத்து தனபாலின் பங்கில் ஒதுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.06.29 20:57:43 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.